

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 6 மற்றும் 7 ம் தேதிகளில் நெல்லை மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவை தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம், ஆ.பிரபாகரன்,சித்திக்,மாநில நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கணேஷ் குமார் ஆதித்தன், இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# எங்களுக்கெல்லாம் தலைவர் பெரியார்தான்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி... முதல் பக்கத் தொடர்ச்சி

**மு.க.ஸ்டாலின் :** அவர் தொடர்ந்து இந்த வேலைகளைத்தான் செய்து கொண்டு இருக்கிறார். அது குறித்து நாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறோம். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. வரும் 4 ஆம் தேதி வழக்கு வருகிறது. அப்போது தெரியும்!

**பெரியார்தான் எங்கள் தலைவர்களுக்கெல்லாம் தலைவர்!**

**செய்தியாளர் -** *பெரியார் மீது இன்னும் விமர்சனம் வைத்து வருகிறார்களே அது பற்றி.......*

**மு.க.ஸ்டாலின் :** பெரியாரை மரியாதை குறைவாக பேசக்கூடியவர்களுக்கெல்லாம் நான் மரியாதை கொடுக்க தயாராக இல்லை. ஏன் என்றால், பெரியார் தான் எங்களுக்கு தலைவர். எங்கள் தலைவர்களுக்கெல்லாம் தலைவர் அவர்தான். அதனால், அதை நாங்கள் பெரிதுப்படுத் தவும் தயாராக இல்லை. பொருட்படுத்தவும் தயாராக இல்லை.

கேள்வி - ஈரோடு சட்டமன்ற இடைத்தேர்தல் பற்றி....

**மு.க.ஸ்டாலின் :** 5 ஆம் தேதி தேர்தல், 8 ஆம் தேதி தேர்தல் முடிவு. அப்போது தெரியும்.

**செய்தியாளர் -** *ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் உங்களுடைய எதிர்பார்ப்பு என்ன. கடந்த முறை தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதாக அறிக்கை வெளியிட்டிருந்தீர்கள். அது பற்றி......*

**மு.க.ஸ்டாலின் :** நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்றது. அதில் தீர்மானம் போட்டு இருக்கிறோம். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபையில் தமிழ்நாட்டின் கோரிக்கைகள் குறித்து வலியுறுத்த சொல்லியிருக்கிறோம். பார்ப்போம். நிதிநிலை அறிக்கை வெளியிட்ட பிறகு தான் என்ன என்பது தெரியும்.

**சட்டம் – ஒழுங்கு சிறப்பாகவே உள்ளது!**

**செய்தியாளர் -** *சட்டம் - ஒழுங்கு குறித்து எதிர்கட்சிகள் தொடர்ந்து கேள்வி எழுப்பி வருகிறார்கள். அது பற்றி............*

**மு.க.ஸ்டாலின் :** வேண்டுமென்றே திட்டமிட்டு அங்கொன்றும், இங்கொன்றுமாக நடைபெறும் சில சம்பவங்களை பெரிதாக பூதாகரமாக்குகிறார்கள். அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எங்களைப்பொறுத்தவரை சட்டம்ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது. அதனால் தான் வெளிநாட்டில் இருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் தொழிற்சாலைகள் எல்லாம் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின்அவர்கள் பேட்டியளித்தார்.

### நீலகிரி மாவட்ட ஜென்மம் எஸ்டேட் சட்டப்பிரிவு 17 நிலங்கள் தொடர்பான

# நீதிமன்ற வழக்குகள் - நிலவரி திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை!

சென்னை, பிப். 1-

நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் நிலஉடைமை முறை குறித்து வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசு 1969 ஆம் ஆண்டு ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டத்தில் பிரிவு 17 நிலங்களில் வசிக்கும் மக்களின் அடிப்படை வசதிகள், நீதிமன்ற வழக்குகள் மற்றும் நிலவரித் திட்ட பணிகள் குறித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (30.01.2025) நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் நிலஉடைமை முறை குறித்து வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசு 1969-ஆம் ஆண்டு ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டத்தில் பிரிவு 17 நிலங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகள் மற்றும் நிலவரித் திட்ட பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு அரசு 1969 ஆம் ஆண்டு ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டத்தின் அடிப்படையில் குத்தகை காலம் முடிந்த 34,986.28 ஏக்கர் நிலங்களை மீட்கும் நடவடிக்கையை தொடரவும், மேற்கண்ட சட்டப்பிரிவு 17 நிலங்களில் நீண்ட காலமாக வசித்து வரும் மக்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் வசதிகளை நிறைவேற்றும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், கூடலூர் ஜென்மம் நிலங்களில் தகுதியான குடியிருப்பு பகுதிகளுக்கு அடிப்படை தேவைகளை நிறைவேற்றிட உள்ள தடையாணையை நீக்கும் பொருட்டு உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்யவும், நீதிப் பேராணை மனு எண். 202/1995இல் விவாதிக்கப் படும் வனப்பிரச்சனைகளிலிருந்து தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் நிலங்கள் சட்டம் 1969இன் கீழ் வரும் வழக்குகளை பிரித்து தனியாக விசாரணை செய்ய உச்சநீதி மன்றத்தில் உரிய அனுமதி பெறுவது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், வனத்துறை அமைச்சர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சுற்றுசூழல், கால நிலை மாற்றம் மற்றும் வனத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், சட்டத்துறை செயலாளர் சி. ஜார்ஜ் அலெக்சாண்டர், நில நிருவாக ஆணையர் மருத்துவர் கே.சு.பழனிச்சாமி, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் ப.மதுசூதன்ரெட்டி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





தேனி தெற்கு மாவட்டம் கம்பம் பார்க் திடலில் மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டம் தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரகாஷ் தலைமையில் நகர செயலாளர்கள் எம்.சி.வீரபாண்டியன், சி.பால்பாண்டி ராஜா ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள். தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., மகாராஜன் எம்.எல்.ஏ., தலைமை கழக பேச்சாளர் சிங்கை பிரபாகரன் மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்து மாணிக்கம், தீர்மான குழு இணை செயலாளர் ஜெயக்குமார், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். மாவட்ட துணை செயலாளர் செந்தில், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், நகரக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் – ஒற்றையர் பிரிவில்

# தமிழ்நாட்டைச் சேர்ந்த ப்ரித்வி சேகருக்கு ‘சாம்பியன்ஷிப்’ பட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, பிப். 1-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆஸ்திரேலியா நாட்டின் மெல்போர்ன் நகரில் நடைபெற்ற செவித்திறன்குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றப்ரித்வி சேகர் அவர்கள் சந்தித்து பரிசுக் கோப்பையை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக்கிட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் வெளிநாடுகளில் தொடர்ந்து நடைபெற்று வரும் போட்டிகளில் கலந்து கொள்ள வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி பெறுதல், அதற்கான போக்குவரத்துச் செலவுகளை மேற்கொள்ளுதல், சத்தான உணவுகளை எடுத்துக் கொள்வது, மேம்பட்ட பிரத்யோகமான விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்துதல் ஆகிய செலவுகளை ஈடுகட்ட எலைட் திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (Elite) திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வருடாந்திர ஊக்கத் தொகை ரூ.25 இலட்சத்தை தற்போது30 இலட்சமாகஉயர்த்தி வழங்கி வருகின்றது.மேலும் இத்திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை 12 லிருந்து தற்போது 27 ஆக உயர்த்தப்பட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பயன்பெற்று வருகின்றனர்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (Elite) திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு பயன்பெற்று வரும் மாற்றுத்திறனாளி டென்னிஸ் வீரர் ப்ரித்வி சேகர் அவர்கள்ஆஸ்திரேலியா நாட்டின் மெல்போர்ன் நகரில் 24.1.2025 முதல் 26.1.2025 வரை நடைபெற்ற செவித்திறன்குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் பங்கேற்று, சாம்பியன்ஷிப் பட்டம் வென்றார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் எலைட் திட்டத்தின் (Elite Sportsperson Scheme) வீரர் ப்ரித்வி சேகர் அவர்கள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 30.1.2025 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து, செவித்திறன் குறைபாடுடை யோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றதற்கான பரிசுக் கோப்பையை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்த சந்திப்பின்போது ப்ரித்வி சேகர் அவர்களின் பெற்றோர் தங்களது செலவில் குறிப்பிட்ட போட்டிகளில் மட்டுமே விளையாட வைக்க முடிந்த நிலையில், தற்போது எலைட் திட்ட விளையாட்டு வீரராக தேர்வு செய்யப்பட்ட பிறகு, தொடர்ந்து ஐரோப்பிய அளவிலான 3 டென்னிஸ் போட்டிகளில் முன்னணி விளையாட்டு வீரர்களுடன் விளையாடும் வாய்ப்பை பெற்றதால், ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் செலவுகள் குறித்த அச்சமின்றி விளையாடி வெற்றி பெற்றார்.

தங்கள் பிள்ளைகளின் விளையாட்டு ஆர்வத்தை புரிந்து அவர்களை பல்வேறு போட்டிகளில் விளையாட வைக்கும் பெற்றோர்களை ஊக்கப்படுத்தும் வகையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

இவர் சென்ற ஆண்டும் செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் பெற்றோர்கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு

# பட்டா வழங்க சிறப்பு முகாம்கள்!

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அறிவிப்பு!

சென்னை, பிப். 1-

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு பட்டா வழங்க சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது என்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில், 1961 ம் ஆண்டிலிருந்து பொது மக்களின் நலன் கருதி மனைகள், வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளை உருவாக்கி ஒதுக்கீடு செய்து வருகிறது.

அவ்வாறு ஒதுக்கீடு பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் முழுத் தொகையையும் செலுத்திய பிறகு நடைமுறையில் உள்ள வாரிய விதிமுறைகளின்படி விற்பனை பத்திரம் வழங்கி வருகிறது. விற்பனை பத்திரம் பெற்ற ஒதுக்கீடுதாரர்களுக்கு தமிழக அரசின் மேலான உத்தரவிற்கு இணங்க முதற்கட்டமாக சென்னை மாவட்டத்தில் வருவாய் துறையிடமிருந்து நில உரிமை ஆவணம் (பட்டா) பெறுவதற்கு ஏதுவாக முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் வாரிய திட்டங்களில் ஒதுக்கீடு பெற்றவர்கள் பட்டா பெற வருவாய் துறையுடன் இணைந்து சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இச்சிறப்பு முகாம்களில் ஒதுக்கீடுதாரர்கள் பயன் பெற ஏதுவாக துண்டு சீட்டு பிரசுரம் செய்தல், வீடு வீடாக சென்று வசிப்பவர்களிடம் உரிய ஆவணங்கள் சேகரித்தல் மற்றும் அனைத்து ஒதுக்கீடுதாரர்களுக்கும் கடிதங்கள் அனுப்பி பட்டா பெற்றுக் கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடுதாரர்கள் இச்சிறப்பு முன் முயற்சியை பயன்படுத்தி தாங்கள் வீட்டு வசதி வாரியத்திடமிருந்து வாங்கிய சொத்திற்கு நில உரிமை ஆவணம் (பட்டா) பெறுவதற்கு ஏதுவாக விற்பனை பத்திரங்கள் மற்றும் இதர ஆவணங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பாக நடத்தப் படும் சிறப்பு முகாம்களில் ஒப்படைத்து பட்டா பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த அரிய வாய்ப்பின் மூலம் பயன் பெறுமாறு ஒதுக்கீடுதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



திருப்புவனம் பேரூராட்சி பகுதி வார்டு எண் 18 ல் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 9 லட்சம் செலவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம். மற்றும் 1.வது வார்டு எம்ஜிஆர் நகர் பகுதியில் கூடுதல் மின் மாற்றியை பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன் தலைமையில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் திறந்து வைத்தார் பேரூராட்சி செயல் அலுவலர் சங்கர்கணேஷ் அனைவரையும் வரவேற்றார். நகர் செயலாளர் நாகூர்கனி. பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். பேரூராட்சி மன்ற கவுன்சிலர் கமிதாபேகம் சேக்முகமது. செல்வி ரவி. கோபிபாலகிருஷ்ணன் ராமலட்சுமி பாலகிருஷ்ணன். கண்ணன். பத்மாவதி முத்துக்குமார். வேல்பாண்டி. மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

### இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தலைமையில் ஏற்பாடு!

*இராமநாதபுரம், பிப்.1 -*

*இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பேரூராட்சி தலைவர் டி.ராஜா ஆர்.ஜெயந்தி தம்பதியினரின் இல்ல திருமண விழா பிப் 2ம் தேதி குஞ்சார் வலசை ராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகிறது.*

*அதனைத் தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க சார்பில் கீழக்கரை கபாடி வீரர்கள் 750 பேருக்கு தலா 10 லட்சம் விபத்து காப்பீடு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இவ்விரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள தி.மு.க இளைஞரணி செயலாளர்,தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இராமநாதபுரம் வருகை உள்ளார். அவருக்கு உற்சாக வரவேற்பளிக்க இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க சார்பில் ஏற்பாடுகள் மும்முர மாக நடைபெற்று வருகிறது.*

*இது குறித்து இராமநாதபுரம் தி.மு.க மாவட்ட செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ கூறியதாவது:*

*இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு பிப் 1ம் தேதி மாலை 6 மணிக்கு வருகை துணை முதல்வருக்கு மாவட்ட எல்லையான பார்த்திபனூர் முதல் 2 கிலோ மீட்டர் தொலைவு வரை இரு புறங்களில் மின் ஒளி விளக்கும் அமைக்கப்பட்டு 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்சி தொண்டர்கள் திரண்டு வந்து இராமநாதபுரம் மாவட்டத்தின் பாரம்பரிய இசைக்கலைஞர்கள் இசை முழக்கத்துடன் உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.*

*இதன் பின்னர் இராமநாதபுரம் அரசு விருந்தினர் மாளிகையில் தங்கி ஓய்வு எடுத்து பிப் 2ம் தேதி காலையில் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்.*

*அதனைத் தொடர்ந்து கீழக்கரையில் மாவட்ட திமுக சார்பில் ஏற்பாடுகள் கபாடி விளையாட்டு வீரர்களுக்கு தலா 10 லட்சம் மதிப்பிலான விபத்து காப்பீடு ஆணை வழங்குவதுடன்,அனைத்து வீரர்களுக்கும் விளையாட்டு உபகரணங்களை வழங்குகிறார்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*



தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகம் இராமநாதபுரம் மின் பகிர்மான வட்டம் பரமக்குடி கோட்டம் பரமக்குடி உப கோட்டம் நகர் தெற்கு மற்றும் வடக்கு நகர் பிரிவுக்கு உட்பட்ட பாரதி நகர் பகுதியில் ரூபாய் 482535 மற்றும் புது நகர் ரூபாய் 657345/= வைகை நகர் ரூபாய் 765356/= மற்றும் காட்டுப் பரமக்குடி ரூபாய் 522555/= செலவில் ஆகிய பகுதியில் புதிய மின்மாற்றியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் துவக்கி வைத்தார் .நிகழ்வில் வி சுந்தர். உதவி மின் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஜி. கங்காதரன் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி வடக்கு நகர் கழக செயலாளர் ஜீவரெதினம், நகர் மன்ற உறுப்பினர்கள் அமுதாராணி சிவசுந்தரம், தேவகிட்டு,ராதா பூசதுரை,நயினார்கோவில் ஒன்றிய துணை செயலாளர் திலகர், கணேசன் மற்றும் வடக்கு நகர் கழக இளைஞரணி ராஜா மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.